நல்லூர் ... நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PeoplesDaily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 15 [28-03-1993] ஞாயிற்றுக்கிழமை ஓசை 38

## வவுனியா கடைகளில் போலி அம்பிஸிலின்

அம்பிஸிலின் பெயரில் போலிக் குளிகையை உற்பத்திசெய்து, தனியார் வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு விடப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. அம்பிஸிலின் கூட்டுக் குளிகை ஆங்கில எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட வடிவத்தில் இம் மருந்துப்பொருள் வவுனியா வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது. இந்தக் குளிகையின் உள்ளே வெள்ளை நிறத்திலான வேறொரு திண்மப் பொருள் அடைக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு (03 ஆம் பக்கம் பார்க்க)

# நான்கு மாணவர்கள் பரிதாப மரணம்

# வெடியாத செல்லுடன் விளையாடிய விளைவு

## 11 பேர் படுகாயமடைந்தனர்

## மன்னாரில் துயரச் சம்பவம்

(மன்னார்)

மன்னார் மருதமடு பாடசாலைக்கு அண்மையில் வெடிக்காத நிலையில் கிடந்த எறிகணை ஒன்றை பாடசாலை மாணவர்கள் எடுக்க முயன்ற போது அது வெடித்ததில் நான்கு மாணவர்கள் ஸ்தலத்திலேயே உடல் சிதறிப் பலியானதுடன் மேலும் 11 மாணவர்கள் படுகாயமடைந்தனர்.

மேற்படி சம்பவம் பற்றி தெரியவருவதாவது மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள மருதமடு பாடசாலைக்கு அருகில் சிறிலங்கா இராணுவத்தினரால் ஏவப்பட்ட எறிகணைகளில் ஒன்று வெடிக்காத நில்லயில் காணப்பட்டது.

நேற்றுக் காலை 9.00 மணியளவில் இதனைக் கண்ட மேற்படி பாடசாலை மாணவர்களில் சிலர் அதனை எடுக்க முற்பட்டுள்ளனர். இவர்கள் அதனை எடுத்த போது அது எதிர்பாராத விதமாக வெடித்துள்ளது.

இதனால் ஜீவநகர் முருங்கனைச் சேர்ந்த விஸ்வநாதன் தேவராஜா (வயது 12), புலேந்திரன் ஜெபநேசன் (வயது 10), இராசநாயகம் ஜஸ்ரின் தேவநாயகம் (வயது 11) மற்றும் பரிகாரி கண்டல் முருங்கனைச் சேர்ந்த ஜீவதீஸ் கமலநாதன் (வயது 11) ஆகி

(3ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் பதற்றம்

## பெண்புலிகள் ஊடுருவலாம்

### 5 பெண்கள் உட்பட 120 பேர் கைது

(கொழும்பு)

புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பல பெண்கள் கொழும்புக்குள் ஊடுருவி இருப்பதாக சிறிலங்கா பொலீஸ் வட்டாரங்கள் கூறியுள்ளன. அண்மையில் கைதான சிலர் தெரிவித்த தகவலை அடுத்து இது தெரிய வந்திருப்பதாகவும், இந்த பெண்கள் தற்போது கைது செய்யப்பட்டிருப்பதாகவும் பொலீஸார் மேலும் கூறியுள்ளனர்.

இதேவேளை, எந்த நேரத்தில், என்ன நடக்குமோ தெரியாது என்று கொழும்பில் பதற்றம் நிலவுவதாகவும், பொலீஸார் சந்தேகப்படும்படியானசகலரையும் கைதுசெய்து வருவதாகவும் கூறப் படுகின்றது. இதுவரையில் 120 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

## இராணுவ சூட்டிற்கு குடும்பஸ்தர் பலி

(திருமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் கடந்த 22 ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினர் குடும்பஸ்தர் ஒருவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

திருமலை மாவட்டம் கடற்கரைச் சேனை என்ற இடத்தில் நடைபெற்ற மேற்படி சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சின்னத்தம்பி நாதன் [வயது 40] என்பவரே கொல்லப்பட்டவராவர்.

## வடபகுதியில் படைகுவிப்பு கிழக்கில் இராணுவம் குறைப்பு

(மட்டக்களப்பு)

### அதிகாரி தகவல்

மட்டக்களப்பிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் வட பகுதி முகாம்களுக்கு மாற்றப்

பல பகுதிகளிலும் உள்ள இராணுவ முகாம்களிலும் கடமை

## மீட்புநிதி சேகரிப்பு

இன்று நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் காலை 9-00 மணி தொடக்கம் 10-00 மணி வரையும் மீட்பு நிதி சேகரிக்க ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது. இதுவரை மீட்பு நிதி செலுத்தத் தவறியோர் இக்குறித்த நேரத்தில் தமது மீட்பு நிதிக்கடனைச் செலுத்த

## எச்சரிக்கை

சிறிலங்கா இராணுவத்தால் ஏவப்பட்டு வெடிக்காத நிலையிலுள்ள 'செல்'கள் மற்றும் குண்டுகள் தொடர்பாக மக்களை அவதானமாக இருக்குமாறு விடுதலைப் புலிகள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

வெடிக்காத நிலையிலுள்ள 'செல்'கள் குண்டுகளை எடுக்கவோ அன்றி அவற்றுடன் விளையாடவோ பரீட்சிக்கவோ வேண்டாம் எனவும் கோரிக்கை விடுத்துள்ளதுடன் அவ்வாறான 'செல்'கள் குண்டுகள் காணப்படும் இடத்து அண்மையிலுள்ள விடுதலைப் புலிகளின் முகாமுடன் தொடர்பு கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தடை முகாமினூடாக சாக்கிற்குத் தடை

வவுனியா தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகாம் ஊடாக சாக்கு எடுத்துவரப் படுவதை இராணுவம் தடுத்திருப்பதை அடுத்து தற்போதைய அறுவடைக் காலத்தில் வன்னிப் பகுதி விவசாயிகள்

[ 3 ஆம் பக்கம் பார்க்க ]

# பூநகரி பாதை திறப்பு விவகாரம் விரைவில் அடுத்தகட்ட ஏற்பாடு

## நிலைமை பற்றி ஜெனீவாவுக்கு அறிவிப்பு

[கொழும்பு]

தரைவழிப்பாதை ஒன் ... கான ஐக்கிய நாடுகள் உயர் ... வின் சிரேஷ்ட பிரதிநிதிகளுட

வந்திருப்பதாகவும், இந்த பெண்கள் தற்போது கைது செய்யப்பட்டிருப்பதாகவும் றது. இதுவரையில் 120 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

## இராணுவ சூட்டிற்கு குடும்பஸ்தர் பலி

(திருமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் கடந்த 22 ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினர் குடும்பஸ்தர் ஒருவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

திருமலை மாவட்டம் கடற்கரைச் சேனை என்ற இடத்தில் நடைபெற்ற மேற்படி சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சின்னத்தம்பி நாதன் [வயது 40] என்பவரே கொல்லப்பட்டவராவார்.

## வடபகுதியில் படைகுவிப்பு கிழக்கில் இராணுவம் குறைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் வடபகுதி முகாம்களுக்கு மாற்றப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சில வருடங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் உள்ள இராணுவ முகாம்களிலும் கடமையாற்றி வந்த இராணுவத்தினரை அங்கிருந்து வடபகுதி முகாம்களுக்கு மாற்றும்

(3ஆம் பக்கம் பார்க்க)

மேற்படி சம்பவம் பற்றி தெரியவருவதாவது மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள மருதமடு பாடசாலைக்கு அருகில் சிறிலங்கா இராணுவத்தினரால் ஏவப்பட்ட எறிகணைகளில் ஒன்று வெடிக்காத நிலையில் காணப்பட்டது.

நேற்றுக் காலை 9.00 மணியளவில் இதனைக் கண்ட மேற்படி பாடசாலை மாணவர்களில் சிலர் அதனை எடுக்க முற்பட்டுள்ளனர். இவர்கள் அதனை எடுத்தபோது அது எதிர்பாராத விதமாக வெடித்துள்ளது.

இதனால் ஜீவநகர் முருங்கனைச் சேர்ந்த ... தேவராஜா (வயது 12), புலேந்திரன் ஜெபநேசன் (வயது 10), இராசநாயகம் ஜஸ்ரின் தேவநாயகம் (வயது 11) மற்றும் பரிகாரி கண்டல் முருங்கனைச் சேர்ந்த ஜீவதீஸ் கமலநாதன் (வயது 11) ஆகி

(3ஆம் பக்கம் பார்க்க)

## மீட்புநிதி சேகரிப்பு

இன்று நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் காலை 9-00 மணி தொடக்கம் 10-00 மணி வரையும் மீட்பு நிதி சேகரிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதுவரை மீட்பு நிதி செலுத்தத் தவறியோர் இக்குறித்த நேரத்தில் தமது மீட்பு நிதிக்கடனைச் செலுத்த முடியும் என தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் சொ. வெற்றி அரசன் அறிவித்துள்ளார்.

## தடை முகாமினூடாக சாக்கிற்குத் தடை

வவுனியா தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகாம் ஊடாக சாக்கு எடுத்துவரப்படுவதை இராணுவம் தடுத்திருப்பதை அடுத்து தற்போதைய அறுவடைக் காலத்தில் வன்னிப் பகுதி விவசாயிகள்

[3 ஆம் பக்கம் பார்க்க]

# பூநகரி பாதை திறப்பு விவகாரம் விரைவில் அடுத்தகட்ட ஏற்பாடு

## நிலைமை பற்றி ஜெனீவாவுக்கு அறிவிப்பு

[கொழும்பு]

யாழ். குடாநாட்டிற்குதரை மார்க்கமாக அத்தியாவசியப் பொருள்களைஎடுத்துச் செல்ல தரைவழிப்பாதை ஒன்றைத் திறப்பதுபற்றி கொழும்பிலுள்ள அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர் ஸ்தானிகராலயம் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே பேச்சு வார்த்தையை மேற்கொள்வதற்கு ஜெனீவாவில் உள்ள அதன் தலைமைச் செயலகத்தின் அனுமதியை எதிர்பார்த்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பூநகரி-சங்குப்பிட்டி பாதையைத் திறப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு ஜெனீவாவின் அனுமதிக்காகக் காத்திருப்பதாக அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர் ஸ்தானிகராலயக் கொழும்பு வதிவிடப் பிரதம அதிகாரியான டாக்டர் பீற்றர் நீக்கலஸ் கூறியுள்ளார். விடுதலைப் புலிகளும் அரசும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தின் மத்தியஸ்தத்துக்கு இணக்கம் தெரிவித்திருப்பது குறித்து தலைமைச் செயலகத்திற்குத் தெரியப்படுத்தியிருப்பதாகவும் அவர் சொன்னார்.

முன்கூட்டியே அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய அதிகாரிகளும் டாக்டர் பீற்றர் நீக்கலஸ்சும் யாழ்ப்பாணத்துக்கான தரைவழிப்பாதை குறித்துப் புலிகளின் சிரேஷ்ட பிரதிநிதிகளுடனும், அரசுடனும் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாக உயர் ஸ்தானிகராலய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தரைவழிப்பாதை தொடர்பான பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான அனுமதி ஜெனீவா தலைமைச்செயலகத்திலிருந்து இதுவரை கொழும்பு அலுவலகத்துக்குக் கிடைக்கவில்லை எனவும் தெரியவருகிறது.

## யாழ். கரையோரம் நோக்கி படையினர் தாக்குதல்

யாழ். குடாநாட்டின் கரையோரப் பகுதிகளை அண்டி சிறிலங்கா இராணுவமுகாம்களிலிருந்தும், கடற்படைப் பீரங்கிப் படகுகளிலிருந்தும் எறிகணை மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

நேற்றுமாலை 6 30 மணியளவில் மண்டைதீவுப் பகுதி இராணுவ முகாமிலிருந்தும் 7.30 மணிக்கு பூநகரி முகாமிலிருந்தும் கிளாலி மற்றும் மண்ணித்தலை கரையோரப் பகுதிகளை நோக்கி பத்திற்கு மேற்பட்ட எறிகணைகள் ஏவப்பட்டன. இதேவேளை இரவு 9.45 மணியளவில் குருநகர் கடற்பரப்பிலிருந்து கடற்படை பீரங்கிப்படகொன்று கரையோரத்தை நோக்கி பீரங்கித் தாக்குதலை நடத்தியது. இத் தாக்குதலால் எதுவித சேதங்களும் ஏற்படவில்லை எனத்தெரியவருகிறது.

# வடக்கு-கிழக்கில் 24மணிநேரத்தில் 12ராணுவத்தினர் பலி; பலர் காயம்

நேற்றுக் காலையுடன் முடிவடைந்த இருபத்திநான்கு மணிநேரத்தில் வெவ்வேறு சம்பவங்களில் மொத்தம் 12 இராணுவத்தினர் கொல்லுப்பட்டதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

முல்லைத்தீவு, மணலாறு, பூநகரி ஆகிய இடங்களில் தலா மூன்று இராணுவத்தினரும், மாதகலில் ஒருவரும், திருமலையில் இருவருமாகவே இப் பன்னிரண்டு பேரும் கொல்லப்பட்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

### பூநகரியில்

பூநகரி இராணுவ முகாம் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகளின் கண்ணிவெடியில் இராணுவத்தினர் பயணம் செய்த உழவுயந்திரமொன்று சிக்கியதில் ஓர் இராணுவ கப்டன் உட்பட மூவர் பலியாகினர் எனவும் பலர் காயமடைந்தனர் எனவும் சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

(3ஆம் பக்கம் பார்க்க)

# மணலாற்றில் 5 படை பலி ஆயுதங்கள் மீட்பு

(மணலாறு)

மணலாறில் நேற்று சிறிலங்கா அரசின் சிங்கள குடியேற்றத்திற்கு பாதுகாப்பு வழங்குவதற்காக அமைக்கப்பட்டிருந்த இரு இராணுவக் காவலரண்கள்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் ஆயுதங்களும், வெடி பொருள்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. காவலரண்கள் இரண்டும் முற்றாக அழிக்கப்பட்டன. விடுதலைப் புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவடைந்தார்.

சிலோன் தியேட்டர் இராணுவ முகாமிற்கு அண்மையில் சிங்கள குடியேற்றங்களுக்கு பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருந்த இவ் இரு இராணுவக் காவலரண்கள் மீதும் அதிகாலை 2.45 மணியளவில் விடுதலைப் புலிகளால் இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஐந்து நிமிடங்கள் மட்டுமே நீடித்த இத் தாக்குதலில் 5 இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு இராணுவ காவலரண்கள் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டன.

இத் தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்த போது அருகிலுள்ள இராணுவமுகாம்களிலிருந்து பரவலான எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அங்கிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் விபரம் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| ☙ ரி 56 - 2 ரக துப்பாக்கி | — 01 | | |
| ☙ ரி 56 - 1 ரக துப்பாக்கி | — 03 | ☙ டப்பி மயின்ஸ் | — 02 |
| ☙ ரி 56 புதிய மொடல் துப்பாக்கி | — 01 | ☙ தலைக் கவசம் | — 02 |
| ☙ ரி 56 ரவைக் கூடு | — 20 | ☙ கத்தி | — 01 |
| ☙ ஏ. கே. கோல்சர் | — 05 | ☙ மழைக் கவசம் | — 01 |
| ☙ ஜே. ஆர். ரக கைக்குண்டு | — 07 | ☙ மில்ரிபெலிற் | — 03 |
| ☙ தொலை நோக்கி | — 01 | ☙ தண்ணீர் கான் | — 04 |
| ☙ 60 எம். எம். கிளீனிங் ரொட் | — 01 | ☙ தொப்பி | — 04 |
| ☙ நடுத்தர ரவைகள் | — 2110 | ☙ சப்பாத்து (சோடி) | — 06 |
| ☙ பி. கே. ரக ரவைகள் | — 124 | ☙ உடுப்பு பாக் | — 02 |

## வீரச்சாவு



வீரவேங்கை
அருளப்பன்

நேற்று அதிகாலை மணலாறு மாவட்டத்தில் அமைந்துள்ள சிலோன்தியேட்டர் இராணுவ முகாமிற்கு அருகில் அமைந்திருந்த இரு காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலின்

[03 ஆம் பக்கம் பார்க்க]

# குவேக்கர்ஸ் குழு கொழும்பு வந்தது

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்விற்கான மற்றுமொரு முயற்சியை மேற்கொள்ளும் முகமாக குவேக்கர்ஸ் குழு பிரதிநிதிகள் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களுடன் பேச்சு நடத்தி வருவதாக கூறப்படுகின்றது. வருடங்கள் பல கடந்தும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாதிருக்கும் இந்நிலையில் மீண்டும் ஒரு சமாதான முயற்சியை மேற்கொள்ளும் முகமாக குவேக்கர்ஸ் சமாதானக் குழுப் பிரதிநிதிகள் லண்டனிலிருந்து கொழும்பு வந்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

## மகாபொல சான்றிதழ் 147 மாணவர் பெற்றனர்

யாழ். செயலகத்தில் வைத்து மகாபொல புலமைப் பரிசில் சான்றிதழ்கள் அமைதியான முறையில் சுமார் 147 யாழ். மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

நேற்றுக்காலை யாழ். செயலகத்தில் யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் இம் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இவ் வைபவத்தில் யாழ். பதில் அரச அதிபர் திருமதி திலகநாயகம் போல், தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர்

[ 3 ஆம் பக்கம் பார்க்க ]

## இறங்குதுறை திருத்தம்

[வடமராட்சி]

கடலில் ஏற்பட்ட கொந்தளிப்பினால் சேதமடைந்த பருத்தித்துறை இறங்குதுறை திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு துரிதமாக நடைபெற்று வருகிறது. [யோ]

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் யோ. தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார்.

## வரி விளம்பரம்

### சோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதவும் கைரேகை, எண்சோதிடம் பார்க்கவும், விவாகப் பொருத்தம், வீட்டுக்கு நிலையம் நிச்சயிக்கவும் நேரில் சந்திக்கலாம். தினமும் காலை 8-30—12-30, பிற்பகல் 3-00—6-00. த. சிவானந்தன், பிரபல சோதிடர், ஆனந்தா சோதிட நிலையம், 384. கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (4560)

### ஸ்ரீ லங்கா அச்சகம்

மக்களின் நல்மதிப்பைப் பெற்ற ஸ்ரீ லங்கா அச்சகம் (புத்தகசாலையல்ல) தனது சொந்த இடத்திலேயே (ராஜா தியேட்டர் அருகாமை ஸ்ரீகாந்தா அச்சகலேன்) இயங்கிக் கொண்டிருக்கின்ற தென்பதை அன்பான மக்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றோம். சிந்தியுங்கள்! செயல்படுங்கள்! (4563]

### தவறிவிட்டது

00092300194 இலக்கமுடைய இராசையா இராசமனோகரன், சந்தை ஒழுங்கை, தெல்லிப்பழை என விலாசமிடப்பட்ட குடும்ப அட்டை யாழ். (ரவுண்) நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (4576)

### வருடாந்த குளிர்த்தி

மந்திகை, கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த குளிர்த்தி எதிர்வரும் 29-ம் திகதி திங்களன்று மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது.

அன்றையதினம் அம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனையும், அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படவுள்ளது. (30)

## இளவாலையில் சிக்கிய 145 பேரின் விபரம்

கடந்த வருடம் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது இளவாலை பகுதியில் சிக்கிய 145 பேரின் பெயர் விபரங்கள் வருமாறு:

அன்ரன் பொன்னுத்துரை (70), வலுப்பிள்ளை சின்னத்தங்கம் (65), செல்லையா செல்வராஜா (32), மனுவேல்பிள்ளை ஜெயரட்ணம் (45) ஜெயரட்ணம் மேரி மார்கிரட் (40), தெய்வசகாயம் பெர்னலெத (50), அருளானந்தம் பூமணி (62), மதியாம்பிள்ளை மரியாம்பிள்ளை, அருச்சுனன் சாந்தி, அந்தோனிப்பிள்ளை ஜோசப் (69), ஜோசப் மேரி மேகதாலினி புஷ்பம் (63).

ஆரோக்கியநாதர் ஜர்மனம்மா (56), இலங்கநாயகம் சிவயோகரட்ணம் (80), இலங்நகாயகம் சிவ ஈஸ்வரி (62), விஸ்வநாதர் வன்னியசிங்கம் (68), வன்னியசிங்கம் செல்வலச்சுமி(63), சுப்பிரமணியம் கனகசபை (68) அருணாசலம் செபசெல்வம் (65), சுப்பிரமணியம் குமரேசம்பிள்ளை (62), கஸ்பர் சந்தியா (68) எம். பி. நவரட்ணம் (69), மரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை (61) அந்தோனிப்பிள்ளை மேரி திரேசா (59).

அந்தோனிப்பிள்ளை மேரி அன்ரன் ரீட்டா (18), சுவர்ணமுத்து அன்னம்மா (83). பிலிப்பையா நச்சஸ்ரம் (73), சந்தியாப்பிள்ளை சுந்தரநாயகி (72), மனுவல்பிள்ளை அன்னம்மா (75), சிங்கநாயகம் தேனஸ்வரநாயகம் (50), தேனஸ்வரநாயகம் சின்னத்தங்கம் (56), ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை (54)

[தொடரும்]

## அன்னை பூபதி நினைவு நிகழ்வுகள்

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று அன்னை பூபதி நினைவாக மட்டுவில் செல்வ விநாயகர் சனசமூக நிலையத்தினர் பாலன் பாலர் பாடசாலை, செல்வ விநாயகர் ஆலய சுற்றுப்புறங்களில் சிரமதானம் மேற்கொண்டார்கள்.

❋

(தொல்புரம்)

அன்னை பூபதி நினைவு நாளையிட்டு சங்கானை வட்டவைப் பிரதேசமெங்கும் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

சனசமூக நிலையங்கள் முக்கிய சந்திகள், அரச நிறுவனங்கள், காரியாலயங்கள் தோறும் அன்னை பூபதியின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு மலர் மாலை அணிவித்து, தீபங்களும் ஏற்றப்பட்டுள்ளன.

சங்கானை, சித்தன்கேணி, வட்டுக்கோட்டை, மூளாய், சுழிபுரம், தொல்புரம் ஆகிய இடங்களிலுள்ள முக்கிய சந்திகளில் அலங்காரப் பந்தல்களும், வீதிகளில் வீரத்தாய்க்கு வீரவணக்கம் செலுத்தும் வசனங்களைத் தாங்கிய பதாகைகளும் கட்டப்பட்டுள்ளன. (41)

❋

தீவக கோட்ட மட்டத்தில் மக்கள் இடம்பெயர்ந்து வாழும் முகாம்கள், அரசியல் துறைபணிமனை, மாணவர் இயக்கப்பணிமனை, பொருண்மிய மேம்பாட்டுக்கழக பணிமனை உட்பட பதிநான்கு இடங்களில் பந்தல்கள் அமைக்கப்பட்டு அன்னை பூபதி அவர்களின் படம் வைக்கப்பட்டு அணையாத தீபங்கள் ஏற்றப்பட்டுள்ளன.

தியாகச்சுடர் அன்னை பூபதி அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு தீவக கோட்டமட்டத்தில் பல இடங்களில் சிரமதான வேலைகள் செய்வதற்கும், கருத்தரங்குகள் நடாத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

## செட்டிகுளம் பாடசாலையில் சிறிலங்கா இராணுவ முகாம்

[வவுனியா]

செட்டிகுளம் தமிழ்ப் பாடசாலையை சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்து அவ்விடத்தில் முகாமிட்டுள்ளது. அப்பாடசாலையில் கடந்த காலத்தில் கல்வி கற்று வந்த மாணவர்கள் சிதறிப்போய் சிறிய சிறிய பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்றனர்.

சமீப காலமாக செட்டிகுளம் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டிருந்த தமிழ் அகதி மக்கள் இராணுவத்தால் வெளியேற்றப்பட்டனர். தற்போது அந்த அகதிகள் அனைவரும் கரம்பமடு என்ற இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

செட்டிகுளம் பிரதேசத்தில் உள்ள ஏனைய பல இடங்களிலும் சிறிலங்கா இராணுவம் நிலை கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. [தி]

## பிறந்த தின வாழ்த்து

### செல்வி இ. செல்வராணி

கோப்பாய் திரு. எம். கே இளையப்பு (ஜே.பி) இராசேஸ்வரி தம்பதிகளின் புதல்வி செல்வி செல்வராணி தனது பிறந்ததினத்தை இன்று 28-3-93-ல் ''குமரகிரி'' இல்லத்தில் கொண்டாடுகின்றார்.

செல்வராணி பல்லாண்டு காலம் நீடூழி வாழ, ஐயா, அண்ணா, சின்னண்ணா. தங்கை மைத்துனிமார், மருமக்கள், உற்றார், உறவினர்கள் வாழ்த்துகின்றனர்.

[சி-6286]

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்

1971-3-5

வீரச்சாவு

1991 3-19

### 2-ம் லெப். அம்பி


[நாகலிங்கம் கனகரஞ்சன்]

திதி-28-3-93

19-3-1991 அன்று சிலாவத்துறை இராணுவ முகாம் தகர்ப்பில் வீரச்சாவைத் தழுவிய 2-ம் லெப். அம்பி (நாகலிங்கம் கனகரஞ்சன்), இவருக்கும் இவருடன் வீரச்சாவடைந்த 82 மாவீரர்களுக்கும் எமது வீர அஞ்சலிகள்.

புத்தூர் கிழக்கு, புத்தூர். (4078) தகவல் -குடும்பத்தினர்.

## 2-ம் ஆண்டு இதயஞ்சலி



## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:

02 — 11 — 1975

❋

வீரச்சாவு:

20 — 03 — 1991

### லெப். சோமன்

(விநாயகமூர்த்தி இராசேந்திரன்)

கல்வயல், சாவகச்சேரி

திதி: 28-03-1993

மன்னார், சிலாவத்துறை போர்முனையில் இவருடன் வீரச்சாவடைந்த 81 மாவீரர்களுக்கும் எமது அஞ்சலியை சமர்ப்பிக்கின்றோம்.

கல்வயல், சாவகச்சேரி, 28-03-1993. —சோமன் குடும்பத்தினர்

(4566)

## நினைவு கூருகின்றோம்...

### 1993-03-28

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் சுன்னாகத்தில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட 8 தமிழர்கள்.

1989 ஆம் ஆண்டு திருமலை நிலாவெளிப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

தயான் [சின்னராசா அமுதலிங்கம் - நிலாவெளி - திருமலை]

பொத்துவில் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப். கலா (செல்லக்குட்டி சுவேந்திரராசா - பொத்துவில் - அம்பாறை)

1991 ஆம் ஆண்டு மட்டு - விளாவெட்டுவான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

விசு (கெனடி ராசன் அனிஸ்டஸ்ராஜன் - ஜெயந்திபுரம் - மட்டு.)

அம்பாறை - காரைதீவுப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

ரமணி (அழகையா இந்திரன் - காரைதீவு-02 - அம்பாறை)

கீரிமலையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான

## 90ஆம் நாள் நினைவஞ்சலி

28 - 12 - 1992 அன்று யாழ் மாவட்டத்தில் தெல்லிப்பழைப் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவடைந்த...





க்கு விசேட அபிஷேக ஆரா தனையும், அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட வுள்ளது. (30)

வட்டுக்கோட்டை, மூளாய், சுழிபுரம், தொல்புரம் ஆகிய இடங்களிலுள்ள முக்கிய சந்தி களில் அலங்காரப் பந்தல்

கள் செய்வதற்கும், கருத்தரங் குகள் நடாத்துவதற்கும் ஏற் பாடுகள் செய்யப்பட்டு வரு கின்றன.

# 90ஆம் நாள் நினைவஞ்சலி

28 – 12 – 1992 அன்று யாழ் மாவட்டத்தில்
தெல்லிப்பழைப் பகுதியில் இராணுவத்தினருடன்
ஏற்பட்ட மோதலில் வீரச்சாவடைந்த...



## லெப். நீலவண்ணன்

[கிறேசியஸ் ஆனந்த்]
முதலாம் குறுக்குத்தெரு,
குருநகர்.

பிறந்த திகதி :
25 - 07 – 1975

வீரரே......
விடுதலைப் பாதையில்
வீறுநடை போட்ட - இரு
வீர வேங்கைகள் நீங்கள்
உங்கள் பயணத்தில் - அங்கே
உயிரில்லா ராணுவம் எத்தனை
உடலில்லா கூலிகள் எத்தனை
உம் குண்டுபட்டு கிடந்தன
கடைசி பயணம் செல்ல
கட்டுவன் புலம் சென்று
காடையர் களம் புகவென-
கண் தூங்காமல் வேவு செய்து
காற்றோடு காற்றாகினீர்



## 2-ம் லெப். நாவல்லன்

[பிரதீப்]
தர்மலிங்கம் சுரேஸ்
தாவடி தெற்கு,
கொக்குவில்.

பிறந்த திகதி:
30 – 04 - 1971

பிரதீப் நீலவண்ணன் - எம்
நெஞ்சங்களி நிலைத்த - இரு
தேச வரலாற்று நாயகர்கள்
உங்கள் பயணம் நிற்கவில்லை
எங்கள் தோள்களில் சுமையாகிறது
உமது லட்சிய தாகங்கள்
எனவே.....
கட்டுவன் புலம்
காவலரண் அழியும்
எங்கள் சுமை அங்கே குறையும் - எனவே
உங்கள் பாதசுவட்டை - எங்கள்.
பயண பாதையாக மாற்றுகிறோம் - அதில்
உங்கள் வரலாறு வரைவோம்.

**- நண்பர்கள்**

(சி-6285)

# 2-ம் லெப். அம்பி

[நாகலிங்கம் கனகரஞ்சன்]
திதி-28-3-93

19-3-1991 அன்று சிலாவத்துறை இராணுவ முகாம் தகர்ப்பில் வீரச்சாவைத் தழுவிய 2-ம் லெப். அம்பி (நாகலிங்கம் கனகரஞ்சன்), இவருக்கும் இவருடன் வீரச்சாவடைந்த 82 மாவீரர்களுக்கும் எமது வீர அஞ் சலிகள்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர். (4078)

தகவல்
-குடும்பத்தினர்.

# 2-ம் ஆண்டு இதயஞ்சலி



## வீரவேங்கை கசின்

[கந்தசாமி சிவகுமார்]

தாயின் மடியில்
12. 05. 1970

தாயக விடிவில்
28. 03. 1991

வட்டூரின் விடுதலை வித்தே - நீ
விட்டுச் சென்ற பணியை
தொட்டுத் தொடர்கின்றன - பல
மொட்டுக்கள்
விடுதலைக்காய்
விடலைப் பருவத்தில் வீழ்ந்தவனே - உன் புயல்
உடல் விடிவுக்காய் எருவாகும் - அங்கே
தமிழனின் தாகம்
தமிழீழத் தாயகம் உருவாகும்.

- உன் பிரிவால் வாடும்
பாசத்தின் அப்பா,
அம்மா, அண்ணா, அக்கா,
பெரியப்பாமார் குடும்பத்தினர்,
உறவினர், நண்பர்கள்.

கசின் வீதி,
வட்டு கிழக்கு,
வட்டுக்கோட்டை,
மாவடி. (4556)

சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிர யோகத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட 8 தமிழர்கள்.

1989 ஆம் ஆண்டு திருமலை நிலாவெளிப் பகுதி யில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய் திய -

**தயான்** [சின்னராசா அமுதலிங்கம் - நிலாவெளி - திருமலை]

பொத்துவில் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். கலா** (செல்லக்குட்டி சுவேந்திரராசா - பொத்துவில் - அம்பாறை)

1991 ஆம் ஆண்டு மட்டு - விளாவெட்டுவான் பகுதி யில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சம ரில் வீரச்சாவெய்திய -

**விசு** (கெனடி ராசன் அனிஸ்டஸ்ராஜன் - ஜெயந்தி புரம் - மட்டு.)

அம்பாறை - காரைதீவுப் பகுதியில் சிறிலங்கா அதி ரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச் சாவெய்திய -

**ரமணி** (அழகையா இந்திரன் - காரைதீவு-02 - அம்பாறை)

கீரிமலையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**கசின்** (கந்தசாமி சிவகுமார் - சிவகுமார் வீதி, மதவடி, வட்டுக்கோட்டை கிழக்கு - யாழ்.)

வவுனியா - தாண்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய் திய -

**லெப். துஸ்யந்தன்** (பொன்னையா தனபாலன் - பூந்தோட்டம் - வவுனியா)

**2-ம் லெப். அலெக்ஸ்** (சோமசுந்தரம் தனபால சுந்தரம் - இராஜேந்திரன்குளம் - வவுனியா)

**பெனா** (மகாலிங்கம் முத்துராசா - நொச்சிக்குளம் - வவுனியா)

**சிறி** (சிவலிங்கம் பெருமாள் - மாறம்பைக்குளம் - வவுனியா)

**சுகிர்தன்** (கந்தையா யோகராசா - செட்டிகுளம் - வவுனியா)

**வரதன்** (தவசி சுப்பிரமணியம் - சின்னகுளம் – வவுனியா)

**வள்ளல்** (கனகரத்தினம் குமாரச்சந்திரன் - இரத்தின புரம் - கிளிநொச்சி)

மாவிட்டபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தி னருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**ஜெகன்** (வேலாயுதம் ஜெயகாந்தன் - பன்னாலை - யாழ்.)

1992 ஆம் ஆண்டு பூநகரி - கறுக்காய்த்தீவுப் பகுதி யிலுள்ள சிறிலங்கா இராணுவக் காவலரண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின்போது வீரச் சாவெய்திய -

**கப்டன் நிதிதரன்-அல்பேட்** (சின்னராசா ஜீவ கரன் - தளவாய் பன்குடாவெளி - மட்டு.)

**மேஜர் விவேகன் அர்ச்சுன்** (சூசையப்பு இன்பகுமார் - 5-ம் வட்டாரம், வங்காலை - மன்னார்)

மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கி யிருந்து மேற்கொண்ட தாக்குதலின்போது வீரச்சாவெய் திய -

**சித்தன்** [பொன்னுச்சாமி ஜெயராம் - பூவரசங்குளம் - வவுனியா]

**2-ம் லெப். ஜெகநாத் - செங்கதிர்வாணன்** [துரைசிங்கம் பிரபாகரன் - வல்வெட்டித்துறை - யாழ்.]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6282)

மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்



### சிந்தனைக்கு

கடல் அலைகள் ஓயாது தாக்கியபோதும் உறுதியாக நின்று, சூழ்ந்துள்ள நீரின் சீற்றத்தை அடக்கும்,
கடலில் முட்டி நிற்கும் சில முனைக் கோடியோல உறுதியாக நில்

— மார்க்கஸ் அரேலியஸ்

# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 28-03-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## வரலாற்றுக் கடமை

சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு தமிழரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தீர்வுத் திட்டத்தை முன் வைத்து ஒரு சமாதான தீர்வு காணப்போவதில்லை என்பது தற்பொழுது பெரும்பாலும் தெளிவாகிவிட்டது. இனப்பிரச்சினைத் தீர்விற்கென உருவாக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவும், கடந்த காலத்தில் இனப்பிரச்சினைத் தீர்விற்கென கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடுகள், வட்டமேசை மாநாடுகள், தலைவர்களுக்கிடையிலான சந்திப்புக்கள் போன்று தோல்வியில் முடிவடைய உள்ளது என்பதில் சந்தேகம் எதுவுமில்லை.

அரசியல் முயற்சிகள் இவ்வாறு முட்டுக்கட்டை நிலையை அடைந்துள்ள வேளையில், சிறிலங்கா அரசாங்கமோ முப்படைகளின் பலத்தைப் பெருக்குவதில் பெரும் அக்கறை காட்டி வருகின்றது. கடந்த வருடமும் அதற்கு முதல் வருடமும் இராணுவத்திற்கென பெரும் போராயுதங்களைக் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா அரசாங்கம் இவ்வருடம் விமானப்படைக்கும், கடற்படைக்கும் நவீன தொழில்நுட்பத் திறன் வாய்ந்த ஆயுத தளபாடக் கொள்வனவில் ஈடுபட்டுள்ளது.

கடந்த இரு வருடங்களில் இராணுவத்திற்கென முன்னாள் செக்கோசெலவோக்கியாவிலும், சீனாவிலும் இருந்து டாங்கிகளையும், கவசவாகனங்களையும் சிறிலங்கா கொள்வனவு செய்தது. இதேவேளை கடந்த வருடத்திலும், இவ்வருடத்திலும் விமானப்படைக்கு சீனாவிடம் இருந்தும், ரஷ்யாவிடம் இருந்தும் ஜெட்விமானங்களையும், உலங்கு வானூர்திகளையும் கொள்வனவு செய்து வருகின்றது.

சிறிலங்கா அரசாங்கத்தின் ஆயுதப்படையை நவீனப்படுத்தும் இத்திட்டமானது தமிழருக்கு எதிரான போரில் தமிழருக்குப் பேரழிவை உண்டு பண்ணுவதும், கடந்த வருடப் போரில் ஏற்பட்ட தோல்வியால் மனவுறுதி தளர்ந்து போயுள்ள படையினருக்கு உற்சாகம் ஊட்டுவதோடு, இராணுவத்தில் ஏற்பட்டுள்ள ஆட்பற்றாக் குறையை நவீன தொழில்நுட்பத்தினால் நிவர்த்தி செய்யும் நோக்கமும் கொண்டதுமாகும்.

சிறிலங்காவின் இம் முயற்சிக்கு முன்னாள் கம்யூனிச நாடுகளான கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் தன்னைத் தற்பொழுதும் கம்யூனிச நாடாகக் கூறிக்கொள்ளும் சீனாவும்

### தோட்டப்பகுதி மக்களுக்கு

# காணி ஒதுக்க, ஜனசவிய வழங்கவும் இ. தொ. காங்கிரஸ் கோரிக்கை

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல்களின்போது ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிப்பதற்கு இ. தொ. கா. நிபந்தனை விதித்துள்ளது. தோட்டத் தொழிலாளர்கள் தமது குடியிருப்புக்கான வீடுகளைக் கட்டிக் கொள்வதற்கு காணி ஒதுக்கப்பட வேண்டும்; அரசாங்க சேவையில் தகுதியான தோட்டப்புற இளைஞர்களுக்கு நியமனம் வழங்கப்பட வேண்டும்; மாதாந்தம் 26 வேலை நாட்களுக்கு உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும்; பாடசாலைகளில் ஆசிரியர்கள் மற்றும் தளபாடங்கள், உபகரணங்கள் என்பவற்றில் நிலவும் தட்டுப்பாடுகள் நீக்கப்பட வேண்டும்; தோட்டத் தொழிலாளர்களின் குடும்பத்தினர்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு வசதி பெற வகை செய்ய வேண்டும் என்பனவற்றுடன், தோட்டத் தொழிலாளர்களாக இருந்து இளைப்பாறியோருக்கும், தோட்டப் புறங்களில் வாழும் வேலையற்ற குடும்பங்களுக்கும் ஜனசவிய உதவித் திட்டம் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இ. தொ. கா. நிபந்தனைகளை முன் வைத்துள்ளது.

இந்தக் கோரிக்கைகளை முன்வைத்து ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் பிரதமர் டி. பி. விஜயதுங்க, கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கே. என். சொக்ஸி கொண்ட குழுவினருடன் இ. தொ. கா. பேச்சு வார்த்தைகளை நடத்தவுள்ளது.

இந்தப் பேச்சுக்களின்போது திருப்திகரமான முறையில் உத்தரவாதம் வழங்கப்படாத விடத்து மாகாண சபைத் தேர்தலில் இ. தொ. கா. சேவல் சின்னத்தில் போட்டியிடும் என்று இ. தொ. கா. வட்டாரங்கள் கூறியுள்ளன.

### புதிய வீதி அமைப்பு

(குருநகர்)

உணவுக்கு வேலை என்ற அடிப்படையில் யாழ். மறைவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் தாளையடிப் பகுதியில் ஆறுமைல் நீளமான பாதையொன்றை மக்களின் உதவியுடன் நிர்மாணித்துள்ளது. (21)

### ராம நவமி

அளவெட்டி தெற்கு நகேஸ்வரம் சிறி நாகவரத நாராயண தேவஸ்தானத்தில் எதிர்வரும் 1ஆம் திகதி வியாழக்கிழமை சிறிராமநவமிவிழாவும், 3ஆம் திகதி சனிக்கிழமை பங்குனி ஏகாதசி வைபவமும், 5ஆம் திகதி திங்கட்கிழமை பங்குனி உத்தர நிகழ்ச்சியும் நடைபெற இருக்கின்றன.

1ஆம் திகதி நடைபெறும் சிறிராம நவமி தினத்தன்று ஆலயத்தில்இராமநாமஹோமமும் சிறிராம சக்கரத்தாழ்வார் வீதிவலம் வருதலும் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (21)

### பண்ணிசை போட்டியில் முதலிடம்

யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம் பண்ணிசைப் போட்டியில் கொத்தணி மட்டத்தில் மூன்றுபிரிவுகளும், முதலாம் இடத்தையும், கோட்ட மட்டத்தில் 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களையும், மாவட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றது. இப் போட்டிக்கு பயிற்சியளித்த நலன் விரும்பியான திருமதி கமலா பாலசுப்பிரமணியம் அவர்கள் பாராட்டப்பட்டார்.

### பொங்கல் விழா

### கல்விச் சேவை விளம்பரங்கள்

## யாழ். பத்திரிகைகளில் வெளியிடக் கோரிக்கை

(கொழும்பு)

கொழும்புப் பத்திரிகைகளில் வெளியிடும் விளம்பரங்களை யாழ்ப்பாணத்திலுள்ள மூன்று நாளிதழ்களிலும் வெளியிடுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் கல்விச் சேவைச் சபையைக் கேட்டுள்ளார்.

மூன்று நாளிதழ்களும் பதிவு செய்யப்பட்ட பத்திரிகைகள் என்றும், அப்பத்திரிகைகளில் கல்விச்சேவைச் சபை விளம்பரப்படுத்துவதன் மூலம் வடபகுதியிலுள்ள ஆசிரிய கழகம் கல்வி சம்பந்தமான விஷயங்களில் சமவாய்ப்பு வழங்கியதாக அமையும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் வர்த்தமானி நேரகாலத்தில் வடபகுதியில் கிடைப்பதில்லை எனத் தெரிவித்த அவர், வர்த்தமானியில் விளம்பரப்படுத்தவுள்ள கல்விச் சேவை சம்பந்தமான தகவல்களை முற்கூட்டியே இ. த. ஆ. சங்கத்துக்கு அறிவித்தால், அதனை வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் ஆசிரியர்களுக்கு உரிய காலத்தில் தமது சங்கம் தெரியப்படுத்த உதவும் என்றும் கல்விச் சேவைச் சபையைக் கேட்டுள்ளார்.

### மாகாணசபைத் தேர்தல்

## இ.தொ.காவுடன் கூட்டுச்சேர சுதந்திரக்கட்சி முயற்சி

(கொழும்பு)

தொண்டமான் தலைமையிலான இ. தொ. கா. ஆளும் கட்சியுடன் இணைந்து எதிர்வரும் மாகாணசபை தேர்தலில் போட்டியிடுமா என அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டு வரும் இவ்வேளையில், இ. தொ. கா. உடன் கூட்டு அமைக்க சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான எதிர்க்கட்சி கூட்டணி முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

'மக்கள் முன்னணி' எனப்படும் இந்த எதிர்க்கட்சி கூட்டணியின் தூதுக்குழு ஒன்று தொண்டமானை சந்திக்க தயாராகிவருவதையடுத்தே தெற்கில் இந்த புதிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இம்முன்னணியின் தூதுக்குழு இவ்வாரம் நுவரெலியா செல்ல ஏற்பாடாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதே சமயம் இம்முன்னணியின் உறுப்பினர்கள் லலித் தலைமையிலான டி. யூ. என். எப் கட்சியுடனும் 'ஒருமித்த உடன்பாடு' ஒன்றைக் காண முயன்று வருவதாக மற்றுமொரு தகவல் தெரிவிக்கின்றது.

## அன்பளிப்பு

## உருவெடுத்தாய் பூபதியே!

அருந்தமிழின் விடிவிற்காய்
ஆகாரம் தனைவிடுத்து
பெருந்தியாகம் புரிந்திட்ட
பொன்மகளே பூபதியே
கருவறையில் இருந்துநீயெம்
கதியதனை அறிந்தாயோ
பெருவேள்வி புரிவதற்கா
உருவெடுத்தாய் பூபதியே
பாரதத்தின் பாதகத்தை
பாரினின்றும் அகற்றிடவே
பட்டினியாய் கிடந்துமின்று
பார்விடுத்து அகன்றாயோ
அறங்காக்க புறப்பட்ட
அன்னையே எம் பூபதியே
அழியாது நின்தியாகம்
அவனியிலே என்றும்.

அரியாலையூர் வே. ஐ. குமாரதாசன்

## மாவீரர் உருவப் படங்கள் வெளியிடப்பட்டுள்ளன

தமிழீழ விடுதலைப் புலிகள் மாவீரர் பணிமனையினரால் மேலும் ஒரு தொகுதி மாவீரர் உருவப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வுருவப்படங்களைத் தமிழீழ மாவீரர் பணிமனையிலும், மாவீரர் பணிமனைகளிலும், மாவட்ட அரசியற்துறைச் செயலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாவீரர்களின் பெயர், வீரச்சாவடைந்த திகதிவிபரங்கள் வருமாறு:

கப்டன் கரன், வைத்திலிங்கம் - மனோகரன், சுண்டிக்குளி, 05-10-1987

கப்டன் பழனி, பாலசுப்பிரமணியம் - கோகேந்திரராசா, வல்வெட்டித்துறை, 05-10-1987.

கப்டன் மிரேஸ், தவராஜா - மேகனராஜ. வல்வெட்டித்துறை, 05-10-1987.

வீரவேங்கை அமீர், தம்பையா - ரவிச்சந்திரன், மாங்குளம். 07-09-1987.

வீரவேங்கை ஜெய்சங்கர்/ஜெய்சா, தம்பு-ஜெயக்குமார், கோப்பாய்வடக்கு. 1-12-1987

வீரவேங்கை செந்தூரன். சண்முகதாஸ் - தங்கேஸ்வரன், மன்னார், 27-07-1987.

லெப். கேணல் போர்க், மாப்பாணப்பிள்ளை - அரசரத்தினம், 23-11-1990.

மேஜர் சோதியா. அமலஉற்பவ வசந்தி - மைக்கல், நெல்லியடி, கரவெட்டி, 11-1-1990

லெப். தவக்குமார், சோமசுந்தரம் - பாக்கியராஜா, வெற்றிலைக்கேணி, 05-10-87

வீரவேங்கை அசோக்/யூட், மயில்வாகனம் - சந்திரசேகர், தெல்லிப்பழை, 22-11-1987.

### வடக்கு

இக் கண்ணி வெடியில் கப்டன் ஒருவரும் இராணுவ சிப்பாய் ஒருவரும் ஸ்தலத்திலேயே பலியாகினர் எனவும் இன்னும் ஒரு சிப்பாய் படுகாயம் அடைந்தநிலையில் வைத்திய சிகிச்சை பெறும்போது மரணமடைந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பூநகரி பிரதான முகாமிலிருந்து வேறொரு முகாமிற்கு புறப்பட்டுச்சென்ற இராணுவ குழுவொன்று பிரயாணம் செய்த உழவு இயந்திரம் ஒன்றே புலிகளின் கண்ணி வெடியில் சிக்கியதாகவும் இதனால் பல இராணுவத்தினர்

### கம்உதாவவில் இந்திய ஜனாதிபதி

[கொழும்பு]

எதிர்வரும் ஜூலை மாதத்தில் அநுராதபுரத்தில் நடத்தப்பட இருக்கும். கம் உதாவ - 1993 நிகழ்ச்சிகளில் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மாவும் கலந்து கொள்ளவுள்ளார். இக் கம் உதாவ கண்காட்சியில் இந்தியாவின் கிராம உற்பத்திப் பொருள்கள் கண் காட்சிக்கு வைக்கப்படலாம் எனவும் குடியரசுத் தலைவர் பிரதம விருந்தினராக இருப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

### தடை

பெரிதும் பாதிப்படைந்துள்

னங்களையும் சிறிலங்கா கொள்வனவு செய்தது. இதேவேளை கடந்த வருடத்திலும், இவ்வருடத்திலும் விமானப்படைக்கு சீனாவிடம் இருந்தும், ரஷ்யாவிடம் இருந்தும் ஜெட்விமானங்களையும், உலங்கு வானூர்திகளையும் கொள்வனவு செய்து வருகின்றது.

சிறிலங்கா அரசாங்கத்தின் ஆயுதப்படையை நவீனப்படுத்தும் இத்திட்டமானது தமிழருக்கு எதிரான போரில் தமிழருக்குப் பேரழிவை உண்டு பண்ணுவதும், கடந்த வருடப் போரில் ஏற்பட்ட தோல்வியால் மனவுறுதி தளர்ந்து போயுள்ள படையினருக்கு உற்சாகம் ஊட்டுவதோடு, இராணுவத்தில் ஏற்பட்டுள்ள ஆட்பற்றாக் குறையை நவீன தொழில்நுட்பத்தினால் நிவர்த்தி செய்யும் நோக்கமும் கொண்டதுமாகும்.

சிறிலங்காவின் இம் முயற்சிக்கு முன்னாள் கம்யூனிச நாடுகளான கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் தன்னைத் தற்பொழுதும் கம்யூனிச நாடாகக் கூறிக்கொள்ளும் சீனாவும் பெரியளவில் உதவிவருகின்றன. மேற்கு நாடுகள் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆயுத விற்பனையில் சிறிதளவேனும் தயக்கம் காட்டினாலும் ஆயுத விநியோகத்துக்கு கிழக்கு ஐரோப்பிய நாடுகளும், ரஷ்யாவும், சீனாவும் போட்டி போட்டுக் கொண்டு முன் வருகின்றன. இவை எவ்வாறானாலும் பணம் சேர்த்தால் போதும் என்ற நிலையில் உள்ளன.

அத்தோடு உதவிகள் என்றபோர்வையில் மேற்கு நாடுகளிடம் இருந்து கிடைக்கப்பெறும் உதவியானது அரசின் ஆயுதக் கொள்வனவிற்கு பேருதவி புரிந்து வருகின்றது. இவ் இரண்டு அம்சங்களும் சிங்கள அரசின் இராணுவத்தை நவீனமயமாக்கும் திட்டத்திற்கு உறுதுணையான அம்சங்களாகும்.

இதேவேளை அரசாங்கம் அரசியல் தீர்வில் அக்கறை காட்டவில்லை என நாம் மாத்திரம்கூற வில்லை. கொழும்பில் தங்கியுள்ள தமிழ்க்குழுக்களும் இதை ஏற்றுக் கொள்கின்றன பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கையால்சலிப் பேறிப் போயுள்ள தமிழ்க்குழுக்கள் அரசின்மீது கண்டனக் கணைகளை வீசியுள்ளன.

சிறிலங்கா அரசாங்கத்தின் இப் புறக்கணிப்பானது இனப்பிரச்சினை தொடர்பான விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை விரும்பியோ அன்றி விரும்பாமலோ சகலரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இதனை வெளிப்படுத்துமாப் போலவே இரு தினங்களுக்கு முற்பட்ட பி.பி.ஸி.யின் விமர்சனமும் அமைந்திருந்தது. ''இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் இன்றைய நிலை புலிகளின் நிலைப்பாட்டிற்கு மேலும் வலுச் சேர்க்கின்றது எனவும், வடக்கு, கிழக்குப் பகுதியை இணைத்து வைத்திருக்க தம்மால் மட்டுமே முடியும் என்ற விடுதலைப்புலிகளின் வாதத்தை வலுப்படுத்தவே உதவுகிறது'' எனவும் பி. பி. ஸி. விமர்சனம் செய்கிறது.

அதாவது சிங்கள அரசின் போக்கானது தமிழ் மக்கள் இலங்கையில் சுதந்திரத்துடனும், பாதுகாப்புடனும் வாழ வேண்டுமானால் போராடியே ஆகவேண்டும் என்பது தவிர்க்க முடியாத நிர்ப்பந்தம் ஆகின்றது. இதில் இருந்து தமிழர்கள் இன்று பின்வாங்கினால் எதிர் காலத்தில் இலங்கையில் தமிழர் என்ற ஒரு தனித்துவம் பொருந்திய இனம் வாழ்ந்தது என்பதையே பௌத்த பேரினவாதம் இல்லாமல் அழித்தொழித்துவிடும்.

---

வார் வீதிவலம் வருதலும் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (21)

### பண்ணிசை போட்டியில் முதலிடம்

யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம் பண்ணிசைப் போட்டியில் கோத்தணி மட்டத்தில் மூன்றுபிரிவுகளும், முதலாம் இடத்தையும், கோட்ட மட்டத்தில் 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களையும், மாவட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றது. இப் போட்டிக்கு பயிற்சியளித்த நலன் விரும்பியான திருமதி கமலா பாலசுப்பிரமணியம் அவர்கள்பாராட்டப்பட்டார்.

### பொங்கல் விழா

மேலைப் புலோலி வாணர் குடியிருப்பு சொக்கன் கலட்டி ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 6 ஆம் திகதி இரவு ஆரம்பமாகி மறுநாள் பகல் 12 மணிக்கு பொங்கல் விழா வைபவம் நடைபெறும். (யோ)

## சுதந்திரக்கட்சி முயற்சி

(கொழும்பு)

தொண்டமான் தலைமையிலான இ. தொ. கா. ஆளும் கட்சியுடன் இணைந்து எதிர்வரும் மாகாணசபை தேர்தலில் போட்டியிடுமா என அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டு வரும் இவ்வேளையில், இ. தொ. கா. உடன் கூட்டு அமைக்க சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான எதிர்க்கட்சி கூட்டணி முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

'மக்கள் முன்னணி' எனப்படும் இந்த எதிர்க்கட்சி கூட்டணியின் தூதுக்குழு ஒன்று தொண்டமானை சந்திக்க தயாராகிவருவதையடுத்தே தெற்கில் இந்த புதிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இம்முன்னணியின் தூதுக்குழு இவ்வாரம் நுவரெலியா செல்ல ஏற்பாடாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதே சமயம் இம்முன்னணியின் உறுப்பினர்கள் லலித் தலைமையிலான டி. யூ. என். எப் கட்சியுடனும் 'ஒருமித்த உடன்பாடு' ஒன்றைக் காண முயன்று வருவதாக மற்றுமொரு தகவல் தெரிவிக்கின்றது.

## அன்பளிப்பு

யா / நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் கல்விகற்கும், பெற்றோர்கள் இல்லாத மாணவர்களுக்கு சாவகச்சேரி யூனியன் பேக்கரியின் ஸ்தாபகர் அமரர் பொ. சரவணமுத்து அவர்களின் 5-ம் ஆண்டு நினைவாக, தந்தையை இழந்த மாணவர்களுக்கு 100/- ரூபாவையும் இருவரையும் இழந்த மாணவர்களுக்கு 200/- ரூபாவையும் அமரருடைய மகன் ச. துரைச்சாமி அவர்கள் அன்பளிப்பாக வழங்கினார். இந் நிகழ்ச்சி பாடசாலையில் சென்ற புதன்கிழமை அன்று நடைபெற்றது. (86)

---

## ரஷ்யாவில் அரசியல் நெருக்கடி தணிய

# பதவி துறப்பதற்கு தயார் ரஷ்ய சபாநாயகர் அறிவிப்பு

(மாஸ்கோ)

ரஷ்யாவில் தற்போது காணப்படும் அரசியல் நெருக்கடியைத் தீர்த்து வைக்கும் முயற்சியில் தனதுபதவியைராஜினாமாச் செய்யத் தயாராக இருப்பதாக ரஷ்யா பாராளுமன்ற சபாநாயகர் கஸ்புலட்டோவ் தெரிவித்துள்ளார்.

நேற்று மக்கள் மன்றமான பாராளுமன்றத்தின் அவசரக் கூட்டத்தை தொடக்கி வைத்துப் பேசிய அவர் மேலும் கூறுகையில், இது விடயத்தில் பொதுக்கருத்து ஒன்றை எட்டுவதற்காக சபாநாயகர் பதவியை விட்டு விலகுவதற்கும் தான் தயங்கப் போவதில்லை எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன் அடுத்த மாதம் கருத்துக் கணிப்பீடு ஒன்றை நடாத்தப் போவதாக அறிவித்திருப்பதன் மூலம் அதிபர் யெல்ட்சின் அரசியல் சாசன நெறிமுறைகளை மீறிச்செயற்படுகின்றார் என்றும் அவர்குற்றம் சாட்டினார்.

## கடலோரப் பாதுகாப்பை தீவிரமாக்க கோரிக்கை

[டில்லி]

ஆயுதங்கள் மற்றும் வெடி பொருள்களை கடற்கரைகள் ஊடாகக் கடத்தப்படுவதைக் கட்டுப்படுத்தும் வகையில் எல்லா மாநில அரசுகளும் கடற்கரையோர பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும் என்று உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் நேற்றுமுன்தினம் விடுத்த அறிக்கையொன்றில் கோரிக்கை விடுத்தார்.

அதில் அவர் மேலும் கூறுகையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள அனைத்துப் பிரிவினரும் தத்தமக்கு இடைக்கும் வேவுத் தகவல்களைப் பரிமாறிக்கொள்ள வேண்டும் என்றும் ஆயுதங்கள், வெடி பொருள்கள் கடத்தலை தடுப்பதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

### 10 பேர் கைது

[கட்மண்டு]

நேபாளத்தில் இலங்கை தமிழர் பத்துப்பேரை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

நேபாள பிரதம மந்திரி கொய்ராலா இந்தியாவிற்கு விஜயம் மேற்கொள்ள இருந்த நாற்பத்து எட்டு மணித்தியாலங்களுக்கு முன்னர் காட்மண்டு பொலீசாரினால் விடுதி ஒன்றில் இருந்த இலங்கை தமிழ்இளைஞர் 10 பேர்கைது செய்யப்பட்டுள்ளனர்.

### சுப்புலக்ஷ்மி போட்டி

[சென்னை]

எதிர்வரும் பழனித் தொகுதிக்கான பாராளுமன்ற இடைத்தேர்தலில் திருமதி சுப்புலக்ஷ்மி ஜெகதீசன் தி.மு.கசார்பில் போட்டியிடுவதாக முன்னர் எடுத்த தீர்மானத்தில் எந்தவிதமான மாற்றமும் இல்லை என தி.மு.க தலைவர் கருணாநிதி நேற்று அறிவித்தார்.

---

டித்துறை, 05-10-1987.

### வடக்கு

இக் கண்ணிவெடியில் கப்டன் ஒருவரும் இராணுவ சிப்பாய் ஒருவரும் ஸ்தலத்திலேயே பலியாகினர் எனவும் இன்னும் ஒரு சிப்பாய் படுகாயம் அடைந்தநிலையில் வைத்திய சிகிச்சை பெறும்போது மரணமடைந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பூநகரி பிரதான முகாமிலிருந்து வேறொரு முகாமிற்கு புறப்பட்டுச்சென்ற இராணுவ குழுவொன்று பிரயாணம் செய்த உழவு இயந்திரம் ஒன்றே புலிகளின் கண்ணி வெடியில் சிக்கியதாகவும் இதனால் பல இராணுவத்தினர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### முல்லைத்திவு:

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று இராணுவ பதுங்கு குழி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் மாதகலில் புலிகளின் மிதி வெடிக்கு ஒரு சிப்பாய் பலியாகியதும், திருக்கோணமலையில் புலிகளின் தாக்குதலுக்கு இரண்டு படையினர் பலியாகியதும் தெரிந்ததே

### வவுனியாக்

விடப்பட்டுள்ளது.

போலி மருந்துப் பொருள்களை உற்பத்திசெய்யும் கோஷ்டி ஒன்று இம்மருந்துப் பொருளையும் உற்பத்தி செய்து விற்பனைக்கு விடுவதில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா நகர வர்த்தக நிலையங்களில் பெருமளவில் காணப்படும் இந்த அம்பிஸிலின் கூட்டுக்குளிகை சுகாதார ஆய்வுக்கு உட்படுத்தியிருப்பதாக அறியவருகிறது. (தி)

### வடபகுதியில்

முயற்சி தீவிரப் படுத்தப்பட்டுள்ளதென சிறிலங்கா இராணுவ இணைப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இராணுவத்திற்கு பதிலாக சிறிலங்காப் பொலீஸாரும், விசேட அதிரடிப் படையினரும் அதிகளவில் குவிக்கப்பட்டுள்ளனர்.

அங்கு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலீஸார் பல புதிய சோதனைச் சாவடிகளை அமைத்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

---

### இந்திய ஜனாதிபதி

[கொழும்பு]

எதிர்வரும் ஜூலை மாதத்தில் அநுராதபுரத்தில் நடத்தப்பட இருக்கும். கம் உதாவ - 1993 நிகழ்ச்சிகளில் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மாவும் கலந்து கொள்ளவுள்ளார். இக் கம் உதாவ கண்காட்சியில் இந்தியாவின் கிராம உற்பத்திப் பொருள்கள் கண் காட்சிக்கு வைக்கப்படலாம் எனவும் குடியரசுத் தலைவர் பிரதம விருந்தினராக இருப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

### தடை

பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

சாக்குக்கு விதிக்கப்பட்ட இந்தத் தடையினால் உற்பத்திப் பொருள்களை மூடையாகக் கட்டிவைக்க முடியாமல் விவசாயிகள் திண்டாடுகின்றனர்.

மேலும் இராணுவம் அற்ற பகுதிகளில் சாக்குக்கு பெரும் விலை ஏற்பட்டுள்ளது. புதிய சாக்கு ஒன்று 100. 00 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாக தகவல் கிடைத்துள்ளது.

எத்தனையோ கஷ்டங்களுக்கு மத்தியில் உற்பத்தி செய்யப்பட்ட நெல், உழுந்து, கௌப்பி, பயறு போன்ற பொருள்களை கட்டி சேமித்து வைக்க முடியாமல் அலையும் விவசாயிகளின் கதி மோசமாகியுள்ளது. [தி]

### மகாபொல

இளங்குமரன், யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் மற்றும் யாழ். செயலக அதிகாரிகளும் கலந்து கொண்டனர். [பா]

### வீரச்சாவு

போது ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த வீர வேங்கை அருளப்பன் [மொறிஸ் வின்சன் ஸ்ரீதாஸ் - 1 ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை] எனும்போராளிக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### நான்கு

யோர் ஸ்தலத்திலேயே உடல் சிதறிப் பலியானார்கள்.

இதன்போது மேலும் 11 பாடசாலை மாணவர்கள் படுகாயமடைந்தனராயினும் இவர்களது பெயர் விபரங்கள் கிடைக்கவில்லை.

ஈழநாதம்

வலி கிழக்கு வர்த்தகர் சங்கம்

## பொதுக் கூட்டம்

காலம்: 28–03–93 ஞாயிறு மு.ப. 9 மணி
இடம்: நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி

இக்கூட்டத்தில் முக்கிய விடயங்கள்பற்றி முடிவு எடுக்கவேண்டியிருப்பதால் கோப்பாய் வட்டவைக்குட்பட்ட சகல வர்த்தகர்களையும் தவறாது வருகைதரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர். [4582] செயலாளர்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## வீரவேங்கை சித்தன்

தாயக மண்ணில் 03 - 06 – 1976

தமிழீழ விடிவுக்காய் 28 - 03 – 1992

அரும்பிடும் வயதில் இரும்பெனும் நெஞ்சை நீ
பெற்றது எப்படி சித்தனே
நீ கண்டது சத்திய சோதனை அதில்
வென்றது உன்னரும் சாதனை.

காற்றும் மழையும் நண்பனென்று
மணலாற்றுப் பதியினிலே
சீற்றம் கொண்டு எதிரிகளை
கொன்றாய் சித்தனே.

சிவந்த இம்மண்ணின் சுதந்திரம் விரும்பியே
சிங்களப் படைமுன் சிறுத்தையாய் நின்ற சித்தனே
மணலாற்றில் செங்களமாடினாய்
சரித்திரம் படைக்கவே சாவினை அணைத்தாய்.

உன் நினைவுகளுடன் எந்நாளும் வாழும்
அம்மா, அண்ணன், தம்பிமார், பாட்டி, அத்தைமார்,
மாமாமார், சித்தப்பாமார், சித்திமார் (4580)

## வீரவணக்க கூட்டம்

3-ஆம் மாதங்களில் [மார்ச்] வீரச்சாவைத் தழுவிக் கொண்ட தென்மராட்சிக் கோட்ட-கொடிகாமம்வட்டத்திற்குட்பட்ட பதினொரு மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 8.00 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் நடைபெறும். [90]

★

3-ஆம் மாதங்களில் [மார்ச்] வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வலிகாமம்கோட்ட-சங்கானை வட்டத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 7 30 மணிக்கு அராலி வடக்கு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இவ் வீரவணக்கக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் சிறப்புப் பேச்சாளர்கள் உரை நிகழ்த்தவுள்ளனர். அத்துடன் கூட்டமுடிவில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும்இடம்பெறவுள்ளன .[90]

❋

வவுனியா கோவிற் புளியங்குளம் பகுதியில் இன்று நினைவஞ்சலிக்கூட்டம் ஒன்று நடைபெற உள்ளது.

கடந்த காலங்களில் இந்த மாதத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்கள் இந்த அஞ்சலிக் கூட்டத்தில் நினைவு கூரப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இரணை இலுப்பைக்குளம் பிரதேச மாவீரர்கள் அத்தினம் நினைவு கூரப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

### மாவீரர் நினைவாக தையல் பயிற்சி

[தென்மராட்சி]

வீரவேங்கை சோமன் (வினாயகமூர்த்தி இராசேந்திரன், கல்வயல்) 2 ஆம் ஆண்டு நினைவாக இன்று கல்வயலில் சமூகசேவை சங்கத்தினர் தையல் பயிற்சிவகுப்பு ஒன்றை வைபவ ரீதியாக கல்வயல் சிறி சண்முகானந்த பாடசாலைக்கு அண்மையில் ஆரம்

## மகாபொல சான்றிதழ் பெற்றுக் கொள்ளவும்


(யாழ்ப்பாணம்)

மகாபொல புலமைப் பரிசில் சான்றிதழ்களை நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற வைபவத்தில் பெற்றுக் கொள்ளாத சுமார் 80 மாணவர்களில் தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களை யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் தனது காரியாலயத்தில் சந்தித்து பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் தற்சமயம் வெளி மாவட்டங்களில் தங்கியிருந்து கல்விபயிலும் யாழ். மாணவர்களுக்கான புலமைப் பரிசில் சான்றிதழ்களை அங்கேயே வைத்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். [பா]

## இறுதி அஞ்சலி

தாயின் மடியில் 28 | 07 | 1971



நண்பனின் மடியில் 24 | 03 | 1993

### செல்வன் ஞா. வில்சன் நிக்கலஸ்

பிரிய நண்பனே உன்
பிரிவால் வாடுகிறோம்
கரிய விழிகளால் — நீ
பெரிய கதைகள் சொல்வாய்
சொரிகின்றோம் கண்ணீரை
நரிகளின் கொட்டம் அடங்குமென்று
புரிகிறது - புயல் ஒன்றின் பயணத்தை
நிறுத்தி எம்மை கலங்கவைத்த
கல் நெஞ்சு - கயவர்களை இனியும்
கால் பதிக்க விடமாட்டோம்.

உன் பிரிவால் வாடும்,
பதினாங்காம் அணி நண்பர்கள்
யாழ் / மருத்துவ பீடம்.

(4583)

## பதவி வெற்றிடங்கள்

ஆண், பெண் இருபாலாருக்கும் நவீன டிசைன்களில் ஆடைகள் தைப்பதற்கும், பாடசாலை பாக்குகள் தைப்பதற்கும் ஆட்கள் தேவை.

அனுபவமுள்ளவர்கள் சான்றிதழ்களுடனும் சுய விபரங்களுடனும் ஈழநாதம் பணிமனைக்கு 29 - 3 - 93 (நாளை) காலை 10 மணிக்கு நேரில் வரவும்.

குறிப்பு:– மேற்குறிப்பிட்ட பதவி வெற்றிடம் தொடர்பாக ஏற்கனவே நேர்முக பரீட்சைக்கு தோற்றியவர்களும் விண்ணப்பித்தவர்களும் சமுகமளிக்குமாறு கோரப்படுகின்றனர். (சி-6288)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 27-03-1993

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்:- 8788

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-6177, 27-1122, 24-5529, 24-8212, 28-8037, 24-5416, 26-4874, 26-3812, 26-4885, 36-8398, 28-6996, 40-1188, 28-0364, 26-5848, 24-8353, 24-0336, 24-5418, 42-3914, 24-0879, 27-0849, 42-0266, 26-1495.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

26-6320, 26-0736, 26-0032, 24-4367, 28-3233.

## மரண அறிவித்தல்

திருமதி

### ஜெயந்தி வினாயகமூர்த்தி

(குழந்தைகள் பேற்று பரிசாரகர்)

யாழ். முத்திரைச் சந்தி, அரச வீதியைச் சேர்ந்தவரும். துன்னாலை வடக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி ஜெயந்தி வினாயகமூர்த்தி (27-3-93) சனிக்கிழமை காலை அகால மரணமானார்.

இவர் துன்னாலை வடக்கு வேலாயுதம் வினாயகமூர்த்தியின் மனைவியும் யாழ். அரச வீதியைச் சேர்ந்த ஆறுமுகம் முருகேசு - கமலாதேவி தம்பதிகளின் அன்புப் புதல்வியும் வசந்தி, ரவிச்சந்திரன் [சவுதி], பாலச்சந்திரன், சுகந்தி, நந்தினி ஆகியோரின் அருமைச் சகோதரியும் செல்வராசா [ஜெர்மனி] வின் மைத்துனியும், சஜந்தவின் அன்புச் சிறியதாயாருமாவார்.

இறுதிக் கிரியைகள் பரு. துன்னாலை வடக்கு இல்லத்தில் நடைபெற்று இன்று [28-3-93] ஞாயிறு பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு. பாலச்சந்திரன்
[சகோதரர்]

35, அரச வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (சி/6287)

## முதலாண்டு நினைவாக............ வீர வணக்கம்

28 - 03 - 92 அன்று மன்னார் மாவட்டத்தில் பூநகரி பள்ளிக்குடாப் பகுதியில் அமைந்திருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் காவல்அரண்களைத் தகர்க்கும்போரில் தீரத்துடன் போராடி வீரச்சாவடைந்த வேங்கைகளுக்கு எங்கள்

### வீர வணக்கங்கள்





| | |
|---|---|
| தாயக மண்ணில் | தமிழீழ விடிவுக்காய் |
| 03 - 06 - 1976 | 28 - 03 - 1992 |

அரும்பிடும் வயதில் இரும்பெனும் நெஞ்சை நீ
பெற்றது எப்படி சித்தனே
நீ கண்டது சத்திய சோதனை அதில்
வென்றது உன்னரும் சாதனை.

காற்றும் மழையும் நண்பனென்று
மணலாற்றுப் பதியினிலே
சீற்றம் கொண்டு எதிரிகளை
கொன்றாய் சித்தனே.

சிவந்த இம்மண்ணின் சுதந்திரம் விரும்பியே
சிங்களப் படைமுன் சிறுத்தையாய் நின்ற சித்தனே
மணலாற்றில் செங்களமாடினாய்
சரித்திரம் படைக்கவே சாவினை அணைத்தாய்.

உன் நினைவுகளுடன் எந்நாளும் வாழும்
அம்மா, அண்ணன், தம்பிமார், பாட்டி, அத்தைமார்,
மாமாமார், சித்தப்பாமார், சித்திமார். (4580)

# மரண அறிவித்தல்கள்

திருமதி
## மார்க்கண்டு பரஞ்சோதி

மாதகலை பிறப்பிடமாகக் கொண்ட மணியர்குளத்தில் வசிக்கும் மார்க்கண்டுவின் அன்பு மனைவி பரஞ்சோதி 1993-03-19 அன்று காலை 9.00 மணியளவில் காலமாகிவிட்டார். இவர் நந்தகுமார், உதயராணி சேதுர்ராஜா (சிவநேந்தன் த. வி. பு. இயக்க உறுப்பினர்) நிர்மலாதேவி, சிறீதரன், ஆனந்தராஜா ஆகியோரின் அன்புத்தாயாரும். தவமணி, காலம்சென்ற மாணிக்கம், இராஜேஸ்வரி, காலம்சென்ற மகேஸ்வரி, யோகேஸ்வரி, ராணி, தவராஜா ஆகியோரின் அன்புச்சகோதரியுமாவார். அன்னாரின் பூதவுடல் 1993 03-21 அன்று மணியர்குளத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

மணியர்குளம், தகவல்:
பூவரசன்குளம். சே. மார்க்கண்டு (கணவன்)
(சி-6284)

### திருமதி சிவசுந்தரி அமிர்தலிங்கம்

தெல்லிப்பழை வீமன்காமத்தை வசிப்பிடமாகவும், தற்போது கிளிநொச்சியில் வசித்தவருமாகிய திருமதி சிவசுந்தரி அமிர்தலிங்கம் 17 - 03 - 93 இல் கிளிநொச்சியில் காலமானார் இவர் முத்தையா அமிர்தலிங்கத்தின் அன்பு மனைவியும், றகுலன், சர்மிளா, சதீசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுதாகரன் (பொறியியலாளர்) அவர்களின் மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 18 - 03 - 93 அன்று 4 ஆம் வாய்க்கால் கிளிநொச்சியில் நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
டச்சு றோட், திருமதி சாவித்திரிதேவி
உடுவில். துரைரத்தினம்
[4579] (மைத்துனி)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம், இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம்ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

கூட்டத்தில் நினைவு கூரப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இரணை இலுப்பைக்குளம் பிரதேச மாவீரர்கள் அத்தினம் நினைவு கூரப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

### மாவீரர் நினைவாக தையல் பயிற்சி

[தென்மராட்சி]

வீரவேங்கை சோமன் (வினாயகமூர்த்தி இராசேந்திரன், கல்வயல்) 2 ஆம் ஆண்டு நினைவாக இன்று கல்வயலில் சமூகசேவை சங்கத்தினர் தையல் பயிற்சிவகுப்பு ஒன்றை வைபவ ரீதியாக கல்வயல் சிறிசண்முகானந்த பாடசாலைக்கு அண்மையில் ஆரம்பித்து வைக்கவுள்ளனர். [86]

### வர்த்தகர் சங்கப் பொதுக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

வலி-கிழக்கு வர்த்தகர்சங்க பொதுக்கூட்டம் இன்று காலை 9 மணிக்கு நீர்வேலிஅத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## மாட்டு வண்டி சவாரி

[வடமராட்சி]

சகல மாவட்டங்களுக்கிடையிலான மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி இன்று பிற்பகல் 2. 30 மணிக்கு வரணியில் நடைபெறவுள்ளது. [36]

### கருத்தரங்கு

அபிவிருத்தியில் கல்வியின் பங்கு என்னும் தலைப்பிலான கருத்தரங்கு இன்று இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் கருத்தரங்கில் யாழ். பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் மா. சின்னத்தம்பி பிரதம பேச்சாளராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

### பரிசளிப்பு விழா

(வேலணை)

கிளிநொச்சி கனகபுரம் அரசினர் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா கல்லூரி அதிபர் திரு. ஆறுமுகதாஸ் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க.பொன்னம்பலம், மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. கந்தசாமி, கிளிநொச்சி உதவி அரச அதிபர் செல்வி இந்துமதி நாகலிங்கம் ஆகியோர் இவ் விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (14)

உன் பிரிவால் வாடும்,
பதினாங்காம் அணி நண்பர்கள்
(4583) யாழ் / மருத்துவ பீடம்.

தகவல்:
35, அரச வீதி, மு. பாலச்சந்திரன்
நல்லூர், [சகோதரர்]
யாழ்ப்பாணம். (சி/6287)

முதலாண்டு நினைவாக............

# வீர வணக்கம்

28 - 03 - 92 அன்று மன்னார் மாவட்டத்தில் பூநகரி பள்ளிக்குடாப் பகுதியில் அமைந்திருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் காவல்அரண்களைத் தகர்க்கும்போரில் தீரத்துடன் போராடி வீரச்சாவடைந்த வேங்கைகளுக்கு எங்கள்

**வீர வணக்கங்கள்**



**மேஜர் விவேகன்/அர்ஜுன்**
[சூசையப்பு இன்பம்]
5 ஆம் வட்டாரம், வங்காலை, மன்னார்,
வீரப் பிறப்பு : 10 - 01 - 70
வீரச்சாவு : 28 - 03 - 92



**கப்டன் நிதிதரன்/அல்பேட்**
[சின்னராசா ஜீவகன்]
தளவாய், பன்குடாவெளி, மட்டக்களப்பு
வீரப் பிறப்பு : 24 - 07 - 70
வீரச்சாவு : 28 - 03 - 92

**புலியாகி பூகம்பப் பொறியாக எழுந்தீர்**
**புதிதான வரலாறு போரில் படைத்தீர்**
**நிலையாகி எம்நெஞ்சில் நினைவாக வாழ்வீர்.**

உங்கள் நினைவுடன்
**- நண்பர்கள்.**

(சி-6271)